எண்.5/7/3/7/பதிவாளர்/பால்வளம்/2018/PF/38
புதுச்சேரி அரசு
கூட்டுறவுத்துறை (பால் வளம்)
வி.வி.பி. நகர், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009.
----

புதுச்சேரி, நாள்.15.05.2025

**1972-ஆம் ஆண்டு புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு எண்.81 கீழ் பிறபிக்கப்பட்ட செயல்முறை ஆணை**

முன்னிலை: திரு. **S. யஷ்வந்தய்யா**
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், புதுச்சேரி.

**பொருள்:** பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் புதுவை மாநில கூட்டுறவு வங்கியில் கணக்குகள் பராமரிப்பது / துவங்குவது - 1972 ஆம் ஆண்டு புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு எண்.81 கீழ் செயல்முறை ஆணை - பிறப்பித்தல் - தொடர்பாக.

***

1972 ஆம் ஆண்டு புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 2(10) இன் கீழ் புதுவை மாநில கூட்டுறவு வங்கி, கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியளிக்கும் வங்கியாக வரையறுக்கப்பட்டு, மேலும் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி உதவி வழங்குதல் மற்றும் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற உறுதியான நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது.

2. ஆனால் தற்போது சில கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அதன் வங்கி கணக்குகளை புதுவை மாநில கூட்டுறவு வங்கியில் பராமரிக்காமல் தேசியமயமாக்கப்பட்ட வங்கி / தனியார் வங்கியில் தங்கள் வங்கி கணக்குகளை பராமரித்து வருவது இத்துறை கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

3. அச்செயல் கூட்டுறவு கொள்கைகளில் ஒன்றான **“கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு”** என்ற நோக்கத்தினை பலவீனப்படுத்தும் விதத்தில் உள்ளது. எனவே புதுவை மாநில கூட்டுறவு வங்கி உருவாக்கப்பட்ட நோக்கத்தை பின்பற்றவும் மேலும் நவீனமயமாக்கி வணிக வங்கிகளுக்கு இணையாக வசதிகளை விரிவுபடுத்தி அனைத்து சங்கங்களுக்கும் நிதியளிக்கும் வங்கியாக புதுவை மாநில கூட்டுறவு வங்கி இருப்பதால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களும் புதுவை மாநில கூட்டுறவு வங்கியில் தங்கள் சங்க கணக்குகளை துவங்கி / புதுப்பித்து அவ்வங்கியின் வளர்ச்சிக்கும் மேலும் **“கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு”** என்றும் கொள்கையை பின்பற்றுவதும் அவசியமாகிறது.

4. மேலும் புதுச்சேரி அரசு, யூனியன் பிரதேசத்தில் இயங்கி வரும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்கள் நலனை மேம்படுத்தவும், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், மற்றும் புதுச்சேரி பிராந்தியத்தில் பால் உற்பத்தியை பெருக்கவும், புதுச்சேரி அரசால் கொண்டுவரப்பட்டுள்ள 75% மானியத் தொகையில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அனைத்து கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்கள் மானியம் / கடன் பெற்று பயன்பெற புதுவை மாநில கூட்டுறவு வங்கியில் சேமிப்பு கணக்கு துவங்குவதும் அவசியமாகிறது.

தொடர்ச்சி/-

5. மேலும் இத்திட்டத்தை முறையாக செயல்படுத்த, கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களின் வசதிக்காக, கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில் புதுவை மாநில கூட்டுறவு வங்கி, நுண் தானியங்கி டெல்லர் மெஷின்(Mirco ATM) சேவையை துவங்க உத்தேசித்துள்ளது.

6. எனவே, புதுவை மாநில கூட்டுறவு வங்கியின் சிறந்த செயல்பாடுகளுக்கு ஆதரவு அளிக்கவும், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் சங்க உறுப்பினர்களின் நலனுக்காகவும் அவர்களின் நிதிகளை முறையாக பாதுகாக்கவும், புதுவை மாநில கூட்டுறவு வங்கியின் பல புதிய சேவைகளை பயன்படுத்தி பயன்பெறவும், மேலும் **“கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு”** என்ற கொள்கையினை பின்பற்றவும் 1972 ஆம் ஆண்டு புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 81-ன் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் பின் வரும் செயல்முறை ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(அ) புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இயங்கி வரும் அனைத்து கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள், தாங்கள் தற்போது பிற தேசியமயமாக்கப்பட்ட வங்கி / தனியார் வங்கிகளுடன் பராமரித்து வரும் வங்கி கணக்குகளை உடனடியாக மாற்றி தங்கள் சங்க எல்லையில் உள்ள புதுவை மாநில கூட்டுறவு வங்கி கிளையில் புதிய சேமிப்பு கணக்குகளை **31.05.2025-க்குள்** துவங்கி / புதுப்பித்து அதனை இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.

(ஆ) கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அனைத்தும் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் அவர்களின் பெயரில் புதுவை மாநில கூட்டுறவு வங்கியில் புதிய சேமிப்பு **கணக்கை 31.05.2025-க்குள்** துவங்க / புதுப்பிக்க அறிவுறுத்தி, அவ்வாறு துவங்கப்பட்ட / புதுப்பித்த கணக்கின் மூலமே சங்க உறுப்பினர்களுக்கு பால் பணம் பட்டுவாடா, கடன் உதவி வழங்குதல் மானியம் மற்றும் இதர சேவைகள் வழங்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

(இ) புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இயங்கி வரும் அனைத்து கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் பிற தேசியமயமாக்கப்பட்ட வங்கி / தனியார் வங்கி மற்றும் பிற நிறுவனங்களில் பராமரித்து வரும் நிலையான வைப்பு தொகையை உடனடியாக புதுவை மாநில கூட்டுறவு வங்கியில் மாற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

(ஈ) புதுவை மாநில கூட்டுறவு வங்கியின் நுண் தானியங்கி டெல்லர் (Micro ATM) சேவையை பயன்படுத்துமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

(உ) பிற வங்கிகளிலிருந்து பெறப்படும் வசதிகள் அனைத்தும் புதுவை மாநில கூட்டுறவு வங்கியின் மூலம் மட்டுமே பெறபட வேண்டும்.

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES * PUDUCHERRY *

தொடர்ச்சி/-

7. இச்செயல்முறை ஆணையை தவறாமல் புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் அனைத்து பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

8. இச்செயல்முறை ஆணை பெற்றுக் கொண்டதற்கான ஏற்பளிப்பை உடனே அனுப்ப வேண்டும்.

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES PUDUCHERRY

(ச. யஷ்வந்தய்யா)
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்

<u>பெறுநர்</u>

1. மேலாண் இயக்குநர்,
   புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,
   புதுச்சேரி
2. மேலாண் இயக்குநர்,
   காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,
   காரைக்கால்.
3. தலைவர்/நிர்வாகி,
   ________________________ கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (அ) எண்.பி.
   புதுச்சேரி, காரைக்கால் & ஏனாம்.

<u>நகல் பெறுவோர்:</u>

1. கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர், காரைக்கால்.
2. மேலாண் இயக்குநர்,
   புதுவை மாநில கூட்டுறவு வங்கி. புதுச்சேரி.
3. The Web Editor.
4. கோப்பு 2025.